# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 ◆ இதழ் Issue : 178 ◆ வியாழக்கிழமை Thursday ◆ 24.09.2026 ◆ பக்கங்கள் Pages:4 ◆ ₹ 6 ◆ ஈரோடு Erode


# சென்னை மின்வாரிய தலைமையகத்தில் முதலமைச்சர் விஜய் ஆய்வு

## உடனடியாக 600 துணை மின் நிலையங்கள் தேவை என அமைச்சர் நிர்மல்குமார் பேட்டி



சென்னை: தொடர்ந்து மின்வெட்டு புகார் வருவதால், சென்னை அண்ணா சாலையிலுள்ள மின்வாரிய தலைமையத்தில் முதல்வர் விஜய் ஆய்வு நடத்தினார்.

கடந்த சில தினங்களாக தமிழகத்தில் தொடர் மின்வெட்டு ஏற்படுவதாகப் புகார்கள் எழுந்தது வருகிறார். இது குறித்து எதிர்க்கட்சிகளும் அரசை கடுமையாக விமர்சனம் செய்து வருகிறது.இன்று(செப் 23) திடீரென சென்னை அண்ணா சாலையில் உள்ள மின்வாரிய தலைமையகமான மின்னகத்திற்கு முதல்வர்விஜய்நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ன்னை: "நாடு முழுவதும் மின் பற்றாக்குறை இருக்கிறது. திமுக ஆட்சியில் மின்மாற்றிகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. 6 ஆயிரம் மின்மாற்றிகளை சீரமைக்க வேண்டி இருக்கிறது. தமிழகத்துக்கு உடனடியாக 600 ன் நிலையங்கள் தேவை" என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மின்வாரிய தலைமை அலுவலகத்தில் முதல்வர் விஜய் ஆய்வு செய்த பிறகு, அமைச்சர் நிர்மல் குமார் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், "இந்தியா முழுவதுமே மின்சாரப் பற்றாக்குறை இருக்கத்தான் செய்கிறது.

நமக்கு துணை மின் நிலையங்கள் பற்றாக்குறையும் இருக்கிறது. நிறைய இடங்களில் கூடுதல் அழுத்தம் தாங்க முடியாமல் மின்மாற்றிகள் தீப்பற்றி எரிகின்றன. வரும் காலங்களில் இவை சரி செய்யப்படும்.மின்தேவைகளை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திமுக ஆட்சியில் மின்மாற்றிகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. 6 ஆயிரம் மின்மாற்றிகளை சீரமைக்க வேண்டி இருக்கிறது. தமிழகத்துக்கு உடனடியாக600துணைமின் நிலையங்கள் தேவைப்படுகிறது.

மின்வாரியத்துக்கு 10,000 பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.சீரமைப்பு பணிகளை துரிதமாக செய்கிறோம். வரவிருக்கும், கோடை மின் தேவையை சமாளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. காற்றாலை மின் உற்பத்தி குறைவுவாக உள்ளது. மின்பாதி ப்புகளை சரிசெய்ய அதிகாரிகளுக்கு, மக்களும் அவுகாசம் தர வேண்டும்" என்று அவர் தெரிவித்தார். தமிழகத்தில் 600 துணை மின் நிலையங்களை உருவாக்கும் பணிகள் தொடர்பாக முதல்வர் விஜய் தலைமையில் ஆய்வு செய்தோம்; மின் தேவை குறித்து அதிகாரிகளிடம் முதல்வர் விஜய் கேட்டறிந்தார்; தேர்தலுக்காக பராமரிப்பு பணியை தள்ளிப் போட்டதால், தற்போது பழுது ஏற்படுகின்றன.

;20 ஆண்டுகள் பழமையான துணை மின் நிலைய மேம்பாடு குறித்த திட்டத்தை முதல்வரிடம் அளித்துள்ளோம். இவ்வாறு நிர்மல்குமார் கூறினார்.

# "மீராபாய் சானுவின் உறுதி தேசத்துக்கு உத்வேகம்" பிரதமர் மோடி பெருமிதம்



ஆசிய விளையாட்டு பளு தூக்குதலில் வெள்ளி வென்ற இந்தியாவின் மீராபாய் சானுவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டு ஜப்பானின் அய்ச்சி மாகாணத்தில் உள்ள நகோயா நகரில் 20-வது ஆசிய விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா, ஜப்பான்,சீனா,தென்கொரியா உள்ளிட்ட 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 11 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

**வெள்ளிப் பதக்கம்**

இந்த நிலையில், பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை மீராபாய் சானு வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். பெண்களுக்கான 49 கிலோ எடைப்பிரிவில் 198 கிலோ எடையைத் தூக்கிவெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆசிய விளையாட்டில் முதல் பதக்கம்

இதன் மூலம் ஆசிய விளையாட்டு போட்டியில் மீராபாய் சானு தனது முதல் பதக்கத்தை வென்றுள்ளார். ஆசிய விளையாட்டில்இதற்குமுன்பு பதக்கம் வெல்லாத மீராபாய் சானு, தற்போதுவெள்ளிப்பதக்கம் வென்று தனது பதக்கக் கணக்கை தொடங்கியுள்ளார்.

உறுதியும், விடாமுயற்சியும்

இந்நிலையில் ஆசிய விளையாட்டு பளு தூக்குதலில் வெள்ளி வென்ற மீராபாய் சானுவுக்கு பிரதமர் மோடி தெரிவித்துள்ள வாழ்த்து செய்தியில், "ஒரு சிறப்பான வெள்ளிப் பதக்கம் மீராபாய் சானுவுக்கு..! மகளிருக்கான 49 கிலோ எடைப்பிரிவுபளுதூக்கும் போட்டியில் பதக்கம் வென்ற அவருக்கு எனது வாழ்த்துகள். மீராபாய் சானுவின் உறுதியும் விடாமுயற்சியும் தேசத்துக்கு உத்வேகம் அளிக்கிறது. மீராபாய் சானுவால் இந்தியா பெருமை கொள்கிறது. அவரது எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகள்" என்று தெரிவித்துள்ளார்.

கபடியில் 'குரூப் ஏ' பிரிவு ஆட்டத்தில் வங்காளதேசத்தை 48-25 என்றகணக்கில்வீழ்த்திய இந்திய ஆண்கள் அணி,தனது தோல்வியற்ற பயணத்தைத் தொடர்கிறது. குரூப் சுற்றில் இந்திய அணி பெறும் தொடர்ச்சியான 3-வது வெற்றி இதுவாகும். தனது கடைசிலீக்ஆட்டத்தில் நாளை (வியாழக்கிழமை) சைனீஸ் தைபே அணியை எதிர்கொள்கிறது.

இந்த வெள்ளி பதக்கத்தின் மூலம், ஆசிய விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் 7 பதக்கங்கள், கிரிக்கெட்டில் 1 தங்கம் , சாப்ட் டென்னிஸில் வெண்கலம் மற்றும் கலப்பு தற்காப்புக் கலையில் (MMA) சுசிகா தரியால் வென்ற வெண்கலம் உட்பட இந்தியாவின் ஒட்டுமொத்த பதக்கங்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

# மதுராந்தகம் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி செப்டம்பர் 27ல் பிரச்சாரம்



மதுராந்தகம்: மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் செப்.27-ம் தேதி மதுராந்தகம் மற்றும் சுற்றுப்புற கிராமப்பகுதிகளில் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியின் இடைத்தேர்தலில் ஐந்துமுனை போட்டி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில்,திமுக சார்பில்போட்யிடும்வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து பல்வேறு முக்கிய தலைவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், திமுக வேட்பாளரை ஆதரித்து வரும் செப்.27-ம் தேதி எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார். இதில், மாமண்டூர், கருங்குழி, மதுராந்தகம் நகரப்பகுதி, அச்சிறுப்பாக்கம் மற்றும் ஒரத்தி ஆகிய பகுதிகளில் திறந்தவெளி வாகனத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

மேலும், மதுராந்தகம் பகுதியில் பிரச்சார மேடை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இதனால், திமுகவினர் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டு இருப்பதாக தெரிகிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# நந்தா தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்துறைக் பயிலரங்கம்




ஈரோடு நந்தா தொழில்நுட்பக் கல்லூரியின் மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறை சார்பில் மத்திய அரசின் அனுசுதன் தேசிய ஆராய்ச்சி கட்டளையுடன் (ஏ.என்.ஆர்.எஃப்) இணைந்து "ஆர்.என்.ஏ நானோ உயிரியல் உணரித்தளத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் ஐ.ஓ.டி" என்கிற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்துறைக் பயிலரங்கம் இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் தலைமையில் மூன்று நாட்கள் கொண்ட இப்பயிலரங்கிற்கு வேலூர் தொழில்நுட்ப கல்லூரியின் உதவி பேராசிரியர்களான முனைவர் கே. நித்யா, முனைவர் சி.ஆர்.திவ்யா மற்றும் திருச்சி எஸ்.ஆர்.எம்பொறியியல்கல்லூரி இயற்பியல் துறையின் பேராசிரியர் முனைவர். கே. சக்திபாண்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துக் கொண்டார்கள். கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால் முன்னிலை வகித்து பயிலரங்கினால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவரித்தார். முன்னதாக துறையின் தலைவர் முனைவர் என். நந்தகோபால் வரவேற்று பேசினார்.

இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் முனைவர் கே. நித்யா, முனைவர் சி.ஆர்.திவ்யா மற்றும் திருச்சி எஸ்.ஆர்.எம்பொறியியல்கல்லூரி இயற்பியல் துறையின் பேராசிரியர் முனைவர். கே. சக்திபாண்டி ஆகியோர்மேம்பட்ட சுகாதாரத் தீர்வுகளை உருவாக்குவதில் செயற்கை நுண்ணறிவு, ஐ.ஓ.டி, நானோ தொழில் நுட்ப உதவியுடன் ஆர்.என்.ஏ அடிப்படையிலான உயிரி உணர்தலை ஒருங்கிணைத்தல்பற்றிகாணொலி காட்சி மூலமாக மூன்று நாட்கள் விளக்கம் அளித்தார்கள். மேலும், உலக சுகாதாரத் துறையில் எதிர்கொள்ளும் புதுமையான திட்டங்களையும் முன்மாதிரிகளை செயற்கை நுண்ணறிவு துணையுடன் உருவாக்கம் போன்ற பல்வேறு விஷயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். இப்பயிலரங்கில் பல்வேறு பொறியியல்

கல்லூரிகளிருந்து 70க்கும்மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

நிகழ்வின் முடிவில் மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையின் உதவி பேராசிரியர் எஸ். தமிழ்செல்வி நன்றி கூறினார்.

இப்பயிலரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி கோவையில் 'பசுமைப் பயணம்' - 100 இருசக்கர வாகனங்களுடன் விழிப்புணர்வு பேரணி நடைபெற உள்ளது



சுற்றுச்சூழல் பாதுகாப்பு,மரம் வளர்ப்பு மற்றும் நீர்நிலைகளை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோவையில் வீ த லீடர் இயக்கத்தின் சார்பில் 'பசுமைப் பயணம்' நடைபெற உள்ளது.

இதுகுறித்து நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில், பேசிய வீ தி லீடர்ஸ் நிவாகி கோபி கூறியதாவது..

சுற்றுச்சூழலை பாதுகாப்பது ஒவ்வொருவரின் சமூகப் பொறுப்பு என்றும், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களை சுற்றுச்சூழல் சார்ந்த செயல்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியானது

வரும் 27ம் தேதியன்று, காலை7மணிக்கு,குறிச்சி குளம் – சுந்தராபுரம் பகுதியில் இருந்து பசுமைப் பயணம் தொடங்குகிறது. தொடர்ந்து மயிலாடும் பாறை குட்டை, செட்டிபாளையம் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய வகையில் பயணம் நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் 100 இருசக்கர வாகன ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு, நீர்நிலை பாதுகாப்பு மற்றும் பொறுப்பான வாகனப் பயன்பாடு குறித்து பொதுமக்களிடம்விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும், நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 100 மரக்கன்றுகள் நடும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளது.மரக்கன்றுகளை நடுவதுடன், அவற்றை தொடர்ந்து பராமரிப்பதற்கான பொறுப்புணர்வையும் உருவாக்க வேண்டும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்த சுற்றுச்சூழல் முயற்சியில் பங்கேற்று ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்." பசுமையான கோவை – சுத்தமான கோவை" என்ற நோக்கத்துடன் இந்தப் பசுமைப் பயணம் முன்னெடுக்க ப்படுவதாக தெரிவித்தார்.

# தென்காசி சட்டமன்ற தொகுதி கீழப்பாவூர் ஒன்றியம் குறும்பலாப்பேரியில் பத்திரகாளி அம்மன் கோவிலில் கதவு அமைப்பு



சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் தேர்தலின் போது வாக்குறுதி வழங்கியிருந்தார்கள்

அதன் அடிப்படையில் முன் கதவு அமைக்கப்பட்டு அதன் திறப்புவிழா நிகழ்ச்சி நடைபெற்றது

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட டாக்டர் கலைக்கதிரவன் அவர்கள் பத்திரகாளி அம்மன் கோவிலில் அமைக்கப்பட்ட அந்தக் கதவை திறந்து வைத்து சிறப்பி த்தார்கள் நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் தொழிலதிபர் சேவியர் ராஜன் கல்லூரரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் ஊர் நிர்வாகிகள் செல்வன், பவுன்ராஜ் காமராஜ்,முத்து பாண்டி பீமன் அருணாசலம் மணிவண்ணன் ஜெகநாதபாண்டியன் அட்மா சேர்மன் குணசீலன் துரைப்பா ண்டியன் ஆர்த்தி வழக்கறிஞர் ஹரிகிருஷ்ணன், முருகன், கணேசன், ராஜா, உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் கோவிலுக்கு அமைக்கப்பட்ட முன் கதவு சுமார் 13 லட்சம்ரூபாய் செலவில் செய்யப்பட்டது

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்களும் தொழிலதிபர் சேவியர் ராஜன் அவர்களும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்

சிறப்புபூஜைவழிபாடு நடைபெற்றது ஆயிரக்கணக்கான பொது மக்கள் பக்தர்கள் கலந்து கொண்டனர் பல ஆண்டு கனவு நிறைவேறிய குரும்பலா ப் பேரி பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர் கலை கதிர்வன் அவர்களையும் தொழில் அதிபர் சேவியர் ராஜன் அவர்களையும் தேர்தலின் போது கதவு அமைத்து தருவோம் என்று வாக்குறுதி வழங்கி கதவு அமைவதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட திமுக முன்னாள் செயலாளர் சிவ பத்மநாதன் அவர்களையும் பாராட்டி மகிழ்ந்தனர்



கருங்குழி பேரூராட்சியில் மதுராந்தகம் தொகுதி

# த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் வாக்கு சேகரிப்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி த வெ க சார்பில் போட்டியிடும் மரகதம் குமரவேல் அவர்களை ஆதரித்து கருங்குழி பேரூராட்சிக்கு உட்பட்ட. மேலவளம் பேட்டை. பெரியார் நகர். மலைப்பாளையம். கருங்குழி பஜார் வீதி. கீழாண்டை காலனி.

உள்ளிட்ட பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் திறந்தவெளி வாகனத்தில் வீதி வீதியாகவாக்குசேகரித்தார்மேற்கொண்டவேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்களுக்கு பொதுமக்கள் பட்டாசு வெடித்து ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர் இந்த பிரச்சாரத்தில் தவெகமாவட்டசெயலாளர் பாலாஜி மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிரணியினர் மற்றும் விசிக மாவட்ட செயலாளர் அன்புச்செல்வன் பொருளாளர் பாக்கம் பேரறிவாளன். ஊடக செயலாளர் கலைக்கதிரவன். பேரூர் செயலாளர் மலை சமத்துவன். காங்கிரஸ் நிர்வாகி பிரபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# மதுராந்தகம் இடைத்தேர்தலில் முன்னாள் அமைச்சர் R.S.ராஜகண்ணப்பன் வீடு வீடாக சென்று திண்ணை பிரச்சாரம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடை தேர்தலில் முன்னாள் அமைச்சரும் தி. மு.க. தேர்தல் பணிக்குழு தலைவரும் முதுகொளத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான திரு R.S. ராஜகண்ணப்பன் அவர்கள் அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அகிலி. கீழாமூர். ஒரத்தூர். கிளியாநகர். அச்சிறுபாக்கம் பேரூர். மோகல்வாடி.எலப்பாக்கம். அண்ணங்கால். மின்னல் சித்தாமூர். கடமலைபுத்தூர் மற்றும் கருங்குழி பேரூர் உள்ளிட்ட யாதவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் காஞ்சி தெற்கு மாவட்ட இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் S.கலியுக கண்ணதாசன் தலைமையில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.தி மு க தலைவர் மாண்புமிகு தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் அவர்கள் மக்களுக்கு செய்த சாதனைகளை எடுத்து கூறி வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்ச்சியில் கழகத்தை சேர்ந்த யாதவ நிர்வாகிகள் யாதவ மகாசபை நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்

# கோவையில் குளாலர் சமூக மக்கள் கலந்தாய்வு கூட்டம்



இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பரவலாக வாழ்ந்து வரும் குலாலர் இன மக்களை ஒன்றிணைக்கும் வகையில், கோவையில் 5வது தென்னிந்திய அளவிலான குலாலர் இன அரசிதழில் பதிவு பெற்ற அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழகம், ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் வாழ்ந்து வரும் குலாலர் இன மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகமுன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கில், கோவை செல்வபுரம் பகுதியில் இந்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

"5வது தென்னிந்திய பிரஜாபதி அரசிதழில் பதிவு பெற்ற அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் சந்திப்பு – 2026" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவில் இடம்பெற்றுள்ள குலாலர் இன மக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் முன்னேற்றத்திற்காக செயல்படும் அமைப்பை உருவாக்கும் நோக்கில் கூட்டத்தில் பல்வேறு கருத்துகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து விவாதிக்க ப்பட்டன. நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக தெலுங்கானா மாநில அரசின் துணைப் புள்ளிவிவரப் பிரிவின் ஓய்வுபெற்ற அதிகாரி ஸ்ரீ எட்டிக்கலா வீரையா பிரஜாபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், "தென்னிந்திய பிரஜாபதி அரசு அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் முகவரித் தொகுப்பு – 2026" வெளியிடப்பட உள்ளதாகவும், இது சமூக மக்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவிக்க ப்பட்டது. சமூக மக்களிடையே நட்புறவை உருவாக்கி, அவர்களின் பல்வேறு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, சமூக முன்னேற்றத்தி ற்காக தொடர்ந்து பாடுபட உள்ளதாகவும்நிர்வாகிகள்தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் செயலாளர் பழனிச்சாமி, பொருளாளர் நடராஜ், ராமமூர்த்தி, இளங்கோ, ஜெயபாலன், சண்முகம், தமிழ்செல்வி, ராஜகோபால் உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர்.

# ஆலங்குளம் அருகே கிராம கமிட்டி மேல்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் தொடக்கம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடேஸ்வரபுரம் (எ) ரெட்டியார்பட்டி கிராமத்தில் உள்ள கமிட்டி மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது.

பள்ளி தலைமை ஆசிரியர் குகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடங்கனேரி ஊராட்சி மன்றத் தலைவி அமுதா தேன்ராஜ் முன்னிலை வகித்து, பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் உதவி தலைமை ஆசிரியர் அமிர்தவள்ளி, ஆசிரியர்கள் மற்றும் பள்ளி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



# ஆலங்குளத்தில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம்

## 18+1 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தல்

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறைஅலுவலர்கள் சங்க மாநில மைய முடிவின்படி, தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டாரக் கிளைசார்பில் 18+1அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றவலியுறுத்திமதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக் கிளை செயலாளர் குமார் தலைமை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) முருகேசன் வட்டக் கிளை துணைத் தலைவர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அன்னத்தாய் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் 18+1 அம்ச கோரிக்கைகள் குறித்து மாநில செயற்குழு உறுப்பினர்பழனிவிளக்கவுரை ஆற்றினார்.

உதவியாளர் குயின் நன்றியுரை வழங்கினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத்தலைவர் அந்தோணி, உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களும் எழுச்சியுடன் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தினர்கள்

# நெட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் தொடக்கம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெட்டூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கான பெருந்தலைவர்காமராஜர்காலை உணவுத்திட்டம்தொடக்க விழா நடைபெற்றது.

இதனை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய சேர்மன் எம். திவ்யா மணிகண்டன் தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளிடம் பேசினார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன், வட்டார இயக்க மேலாளர் தங்கமாரி, பள்ளி தலைமை ஆசிரியர், உதவி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு வில்லரசம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் பிரசவம்: தம்பதியருக்கு அரசு பரிசுப் பெட்டகத்தை வழங்கிய மாமன்ற உறுப்பினர்



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 10-வது வார்டு பகுதி வில்லரசம்பட்டியில் பொதுமக்களின் மருத்துவத் தேவைகளுக்காக அண்மையில் புதிதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. நவீன வசதிகளுடன் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனையில் அப்பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள் தொடர் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நாகலட்சுமி - தமிழ்ச்செல்வன் தம்பதியினருக்கு மருத்துவர்களின் முறையான கண்காணிப்பில் சுகப்பிரசவத்தில் குழந்தை பிறந்தது.புதிதாகத்திறக்கப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிகழ்ந்த முதல் பிரசவம் இது என்பதால் மருத்துவமனை வளாகத்தில் மகிழ்ச்சி நிலவியது.

இதனைத் தொடர்ந்து, பிறந்த குழந்தையையும் தாயையும் வாழ்த்தி தமிழ்நாடு அரசின் சார்பில்வழங்கப்படும்குழந்தைப் பராமரிப்புப் பரிசுப் பெட்டகம் (அம்மா பேபி கேர் கிட்) வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி 10-வது வார்டு மாமன்ற உறுப்பினர் குமரவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, நாகலட்சுமி - தமிழ்ச்செல்வன் தம்பதியினருக்கு தமிழ்நாடு அரசின் பரிசுப் பெட்டகத்தைவழங்கிவாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேலும், பொதுமக்களுக்குத் தரமான மருத்துவ சேவை வழங்கி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மாமன்ற உறுப்பினர் பாராட்டு தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது ஆரம்ப சுகாதார நிலைய தலைமை மருத்துவர், செவிலியர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் வார்டு பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.



மதுரை கிழக்கு வட்டம், மாங்குளம் கிராமத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மக்கள் தொடர்பு முகாமில் 172 பயனாளிகளுக்கு ரூ.41.43 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

# காலை உணவு திட்ட விரிவாக்கம் குறித்து தருவைகுளம் அரசு பள்ளி மாணவர்களுடன் அமைச்சர் பெ.மதன்ராஜா கலந்துரையாடல்





தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் அரசு உயர்நிலைப்பள்ளியில் 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம்' விரிவாக்க திட்டப்பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில், குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ. மதன்ராஜா அவர்கள் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த அமைச்சர் பெ. மதன்ராஜாவுக்கு, ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் P. அந்தோணி பிரான்சிஸ் சால்வை அணிவித்து, பூங்கொத்து கொடுத்து அன்போடு வரவேற்றார்.

பின்னர் நிகழ்ச்சியில் அமைச்சர் பெ.மதன்ராஜாபேசுகையில்: பெருந்தலைவர் காமராஜர்காலைஉணவு திட்ட விரிவாக்கத்தின் மூலம் பயன்பெறும் அனைத்து மாணவச் செல்வைகளுக்கும் எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதுவரை அரசுமற்றும்அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கப்பட்டு வந்தது. பெரும்பாலான மாணவர்கள் காலையில் சாப்பிடாமல் பள்ளிக்கு வருவதைத் தவிர்க்கும் உயரியநோக்கில்,தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜயின் இத்திட்டத்தினை 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்து இன்று துவக்கி வைத்துள்ளார்கள். ஆகவே மாணவ மாணவியர்கள் இத்திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி, சிறப்பாகக் கல்வி பெற்று உயர்ந்த நிலையை அடைந்து, மாநிலத்திற்கும்நாட்டிற்கும்பெருமை சேர்க்கவேண்டும்என்று தெரிவித்தார். ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் திரு P. அந்தோணி பிரான்சிஸ்,மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், மாவட்ட முதன்மைகல்விஅலுவலர் சங்கீதா சின்னராணி, தூத்துக்குடி புறநகர் மாவட்ட இளம்பெண் அணி அமைப்பாளர் A.ஞான புஷ்பம், ஒன்றிய பொருளாளர் ஜஸ்டின், ஒன்றிய செயற்குழு உறுப்பினர் மகேந்திரன் மற்றும் அனைவரையும் அன்போடு வரவேற்ற தருவைகுளம் மேற்கு கிளை செயலாளர் கே.டி. ராஜா மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் அணி நிர்வாகிகள் ஒன்றிய அணி நிர்வாகிகள் கிளைச் செயலாளர்கள், ஆசிரியர்கள், அரசுத் துறைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவூர் அரசு மாதிரி உயர்நிலைப்பள்ளியில் காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்க தொடக்கவிழா



திருவூர் அரசு மாதிரி உயர்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராசர்காலை உணவுதிட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்க தொடக்கவிழா

ஏற்கனவே ஒன்றும் முதல் ஐந்தாம் வகுப்புவரை முதலமைச்சர் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டு வழங்கி வந்த நிலையில் இந்த திட்டத்தை எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டு பெருந்தலைவர் காமராசர் காலை உணவு திட்டம் என பெயர் மாற்றம்செய்துஇன்றுமாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்ச.ஜோசப்விஜய் இன்று காலை தொடங்கி வைத்தார் இதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் திருவூர் அரசு மாதிரி உயர்நிலைப்பள்ளியில் விரிவாக்க தொடக்க விழா நடைப்பெற்றது பள்ளியில் பயின்றுவரும் 6ஆம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவ மாணவிகள் 98 பேருக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது ஏற்கனவே இப்பள்ளியில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் 68 பேர் காலைஉணவுதிட்டத்தில் பயன்பெற்று வரும் நிலையில் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலான 166 மாணவர்களுக்கு இன்று பெருந்தலைவர் காமராசர் காலை உணவான பொங்கல் சாம்பார் உடன்.சக்கரைபொங்கல் வழங்கப்பட்டது தலைமையாசிரியர் எஸ்.மலர்கொடி அவர்கள் மாணவ மாணவிகளுக்கு வழங்கி தொடங்கிவைத்தார் முன்னதாக தமிழ்நாடு அரசு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் ஆசிரியர் சா.அருணன் வரவேற்றார் உதவி தலைமையாசிரியை பாகிரதிசாரதி, ஆசிரியர்கள் சுரேஷ் , கோபிநாத் , மகாலட்சுமி ராஜேஷ் கண்ணா முன்னிலை வகித்தனர் ஆசிரியர்கள் ஷீலா, லதா, லட்சுமி, கலியபெருமாள் , சுனேத்திரா, உடற்கல்வி ஆசிரியர் மணிமாறன், ஆகியோர் காலை உணவு திட்டத்தின் நோக்கத்தை மாணவ மாணவிகளுக்கு விளக்கினர் முடிவில் காலை உணவு திட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் முருகேஸ்வரி, தீபா, சுகன்யா நன்றி தெரிவித்தனர்

## வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு - ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஆலோசனை



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமையில், வடகிழக்கு பருவமழை 2026-ஐ எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாநகராட்சி கூட்டரங்கில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை, தேசிய நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, வருவாய்த்துறை, மின்சாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஓடைகள் மற்றும் மழைநீர் வடிகால்களை தூர்வாரி, அடைப்புகளை அகற்றி நீர்வழிப்பாதைகளை சீரமைக்கவும், சாலையோரங்களில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடிய மரக்கிளைகளை அகற்றி, தேவையான இடங்களில் முறையாக மரக்கிளைகளை வெட்டவும் அறிவுறுத்தப்பட்டது.

மழைக்கால அவசரநிலைகளை எதிர்கொள்ள தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், மழைநீர் தேங்கக்கூடிய 8 தாழ்வான பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், அவசரகாலங்களில் பொதுமக்களை தங்க வைப்பதற்காக 6 நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான வாகனங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

அனைத்து துறைகளுக்கும் இடையே உடனடி தகவல் பரிமாற்றத்திற்காக WhatsApp குழு அமைக்கவும், மின்கம்பங்கள், மின்கம்பிகள் மற்றும் வயரிங் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து மின்சார விபத்துகளைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

முக்கிய சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் மற்றும் பள்ளங்களை உடனடியாக சீரமைக்கவும், பயன்பாட்டில் இல்லாத மற்றும் சேதமடைந்த அரசு குடியிருப்பு கட்டிடங்களை ஆய்வு செய்து தேவையான இடங்களில் பாதுகாப்பாக அகற்றவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

மாநகராட்சி பகுதிகளில் உள்ள இயந்திர ஆய்வுக்குழிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் ஏற்படும் நிரம்பி வழிதல் (Overflow) பிரச்சினைகளை கண்டறிந்து உடனடியாக சரிசெய்யவும் வலியுறுத்தப்பட்டது.

வடகிழக்கு பருவமழையின்போது பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து முடிக்க வேண்டும் என மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் அறிவுறுத்தினார்.



## ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாதர் கோவில் தேரோட்டம் - பக்தர்கள் பக்தி பரவசம்

ஈரோடு கோட்டை பெருமாள் என அழைக்கப்படும் கஸ்தூரி அரங்கநாதர் கோவிலில், புனிதமான புரட்டாசி மாத தேர்த்திருவிழாவை முன்னிட்டு இன்று தேரோட்டம் நடைபெற்றது. இதில் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் K.K. ஆனந்த் மோகன் பங்கேற்று, தேரின் வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தார்.

"கோவிந்தா... கோவிந்தா..." என பக்தர்கள் முழக்கமிட, பக்தி பரவசத்துடன் ஏராளமான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து பெருமாளை வழிபட்டனர். மேளதாளங்கள் முழங்க நடைபெற்ற தேரோட்டத்தில், பக்தர்கள் பெருமாள் மற்றும் ஆண்டாள் வேடமணிந்து வீதியுலா வந்தனர். விழா முழுவதும் பக்தி உணர்வு நிறைந்து காணப்பட்டது.

## வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு: சாஸ்திரி நகரில் ஓடை தூர்வாரும் பணிகளை ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையாளர்



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வடகிழக்கு பருவமழை-2026 முன்னேற்பாட்டுப் பணிகள் ஈரோடு மாநகராட்சியில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மண்டலம்-4, வார்டு எண்.55, சாஸ்திரி நகர் பகுதியில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்பகுதியில் உள்ள லெனின் வீதி ஓடையில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை பார்வையிட்ட அவர், மண், குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றி, மழைநீர் தடையின்றி செல்லும் வகையில் நீர்வழிப்பாதையை சீரமைக்க அறிவுறுத்தினார்.

மேலும், ஓடையில் உள்ள அடைப்புகள் மற்றும் தடைகளை முழுமையாக அகற்றவும், தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தேவையான இயந்திரங்கள் மற்றும் பணியாளர்களை முறையாக பயன்படுத்தி, பணிகளை தரமாகவும் விரைவாகவும் நிறைவு செய்ய வேண்டும் என ஆணையாளர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது கண்காணிப்பு பொறியாளர் பாக்கியலட்சுமி, செயற்பொறியாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், திண்டல் வேளாளர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையரங்கில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் உற்பத்தி பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சியினை (கல்லூரி சந்தை) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.09.2026) துவக்கி வைத்து பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்டம், பவானி ஸ்ரீபாலாஜி பத்மாவதி மஹாலில் நடைபெற்ற தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முகாமில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.09.2026) வழங்கினார். உடன் தாட்கோ மாவட்ட மேலாளர் சீ.முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பவானி ஸ்ரீபாலாஜி பத்மாவதி மஹாலில் நடைபெற்ற தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, (23.09.2026) அன்று துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் தாட்கோ மாவட்ட மேலாளர் சீ.முருகவேல், பவானி நகர்மன்றத் தலைவர் சிந்தூரி இளங்கோவன் உட்பட பலர் உள்ளனர்.

## ‘Mastermind, treason, biggest scam’: Opposition attacks Gyanesh Kumar after report claims ECI dissent







Opposition leaders on Wednesday demanded strict action against Gyanesh Kumar following a news report claiming internal dissent within the poll body over decisions taken under the election commission chief's leadership.

While some leaders demanded that future elections not be held under Kumar, others called for his removal, arrest or a review of recent polls. The reactions followed a report by The Indian Express that said Election Commissioners Sukhbir Singh Sandhu and Vivek Joshi raised written objections at least 14 times over 10 months saying they weren't told about decisions taken in the commission's name. The ECI has countered the claims and said "internal checks-and-balances were standard" practice but decisions were ultimately taken unanimously. Rahul Gandhi claims 'vote chori'

Lok Sabha Opposition leader Rahul Gandhi, reacting to the report, called alleged "vote chori" a "crime against the Indian people" and a direct attack on the Constitution.

"Vote chori is a crime against the Indian people and a direct attack on our constitution. The BJP, RSS and EC who organised it have committed an act of treason. Justice will be served," Gandhi said on X.

In a video message, Gandhi told Election Commission officials: "I am clearly telling the Election Commission and election officers: What you are doing is wrong. This is treason, it is against the nation. Do not forget this. The time will come! We will catch you! You will not be spared."

Samajwadi Party chief Akhilesh Yadav said the report raised serious questions about the Election Commission.

"Fourteen times in 10 months, senior officers of EC have written note about wrong doings. This is a danger to our constitution and democracy," Yadav said at a press conference. He alleged that his party had previously complained about deletion of voters' names but that no action was taken. He also alleged that the "UP model" had been implemented in West Bengal and Bihar.

"We demand that any future elections should not be held under Gyanesh Kumar," Yadav said. He also alleged that concerns over electoral rolls could eventually affect voting rights.

## ஈரோடு மாநகராட்சியில் சொத்துவரி வசூல் தொடர்பான முக்கிய அறிவிப்பு:



ஈரோடு மாநகராட்சியில் மொத்தம் 1,48,017 சொத்துவரி வரிவிதிப்புகள் உள்ளன. இதில் 2026-27 ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியை 83,843 வரிதாரர்கள் இன்னும் செலுத்தவில்லை.

தற்போது சொத்துவரி நிலுவையில் ரூ.1,975.06 இலட்சமும், நடப்பில் ரூ.4,807.62 இலட்சமும் வசூல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், 2026-27ஆம் நிதியாண்டு வரையிலான முதல் 100 வரிதாரர்களின் பட்டியல் மாநகராட்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இன்னும் ரூ.9,34,65,391/- செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்தும் வழிகள்:

RTGS, NEFT, PAYTM, UPI உள்ளிட்ட இணையவழி மற்றும் இணையதளம் மூலமாக வரிகளை செலுத்தலாம்.

பொதுமக்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்களையும் சொத்துவரியையும் உரிய காலத்திற்குள் செலுத்தி, மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.